தகரப் பந்தல், கதிரைகள்,
சில்வர் கப், பீங்கான்
இன்னும் பல
உபகரணங்களை
வாடகைக்கு பெற
நாடுங்கள்
"ஒளி இல்லம்"
210, பிரதான வீதி,
(யாகப்பர் ஆலய மருங்கில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

For all Ceremonies
At your homes
Our Service available
OLI ILLAM
210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 11 புதன்கிழமை (23 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 88

# கொழும்பில் தமிழர் கைது: மன்னிப்பு சபை கடும் சீற்றம்!

## காரசாரமான அறிக்கை மூலம் ஸ்ரீலங்கா அரசுக்குக் கண்டனம்

லண்டன், பெப்ரவரி. 23

கொழும்பில் தமிழர்கள் வகை தொகையின்றி கண்டபடி கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவது குறித்து கடும் சீற்றமடைந்திருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை அது சம்பந்தமாக காரசாரமான அறிக்கை ஒன்றின் மூலம் ஸ்ரீலங்கா அரசைக் கண்டித்திருக்கிறது.

ஒவ்வொரு மாதமும் கொழும்பு நகரில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் கண் மூடித்தனமாகக் கைது செய்யப்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை கடைசியாக வெளியிட்ட தனது இந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

கைது செய்யப்படுபவர்கள் தடுத்து வைக்கப்படுகின்றார்கள். சிலர் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றார்கள். தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக மட்டுமே இப்படி அவர்கள் நடத்தப்படுகின்றார்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டதை அடுத்து சென்ற ஆண்டின் கடைசி ஆறு மாதங்களில் 15 ஆயிரம் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்

( 6ஆம் பக்கம் பார்க்க)

### இப்படியும் சித்திரவதை!

கொழும்பில் கைதாகும் தமிழர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறுவதற்காக கைதான தமிழர் படையினரால் எவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றனர் என்பதற்கு சென்ற ஆண்டு கைதான தமிழர் ஒருவருக்கு செய்யப்பட்ட கொடுமையை சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் விவரித்துள்ளது.

கைதான இத்தமிழர் கொழும்பில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் அடித்து உதைக்கப்பட்டு, அவரது பிறப்பு உறுப்பு வெட்டப்பட்டதாகவும் —

பிறப்பு உறுப்பை வெட்டுவதற்கு ரம்பம் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நபர் இம்மாத ஆரம்பத்தில் விடுதலை செய்யப்பட்டார். (உ எ-6)

### முச்சந்தி முரளி



கொடுமைக்கார உந்தப் பாவியளை கடவுள்கூட மன்னிக்க மாட்டார்......!

### இன்று படகுச் சேவை

பூநகரி - கிளாலி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஓ-3)

## ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு முன் சமஷ்டி முறைத் தீர்வுக்கான பிரேரணை?

ஜெனிவா, பெப். 23

ஜெனிவாவில் தற்பொழுது நடைபெறும் ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னால், இலங்கை - வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியதாக சமஷ்டி அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற பிரேரணையை கொண்டு வருவதற்கான ஆதரவைத் திரட்டுவதில் ஈழத் தமிழ்க் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

ஜெனிவா வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

இப் பிரேரணையை மேற்கு நாடுகளைச் சேர்ந்த சில அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் சில சமயக் குழுக்களும் ஆதரிப்பதாகவும் கூறப்படுகிறது.

இலங்கை ஜனாதிபதியால் கலைக்கப்பட முடியாத சமஷ்டி அரசு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று இப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமான ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் இப் பிரேரணையை விவாதத்துக்கு எடுப்பதற்கான ஆரம்ப வேலைகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை - இந்திய உடன்படிக்கையில் கூறப்பட்ட சர்வசன வாக்கெடுப்பை நடத்தாமலேயே — தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கை ஓர் அமைப்பாகக் கருத வேண்டும் என்ற அடிப்படையில் இந்த பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

அரசுக்கும் - உலக வங்கிக்கும் இடையே கருத்து வேறுபாடுகள்:

## இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 23

எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவிருந்த இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவின் கூட்டம் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசுக்கும் உலக வங்கிக்கும் இடையேயான கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்தே குழுக்கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாண்டில் நடைபெறவிருக்கும் தேர்தலுக்காக வரவு செலவுத்திட்டம் மற்றும் நிதித்துறையில் உலக வங்கியில் விதித்துள்ள இறுக்கங்களை கொழும்பு அரசு தளர்த்தியிருப்பதும், எயர்பஸ் கொள்வனவில் இடம் பெற்ற முறைகேடுகளும் உலகவங்கிக்கு அதிருப்தியை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற இலங்கைக்கு உதவும் நாடுகளின் குழுக் கூட்டத்தில் 83 கோடி டொலர் நிதியை இலங்கைக்கு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது தெரிந்தே.

குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது குறித்து அநாவசியமாகக் கவலைப்பட வேண்டியது இல்லை என்றும்—

பாரம்பரியமற்ற பொருள் ஏற்றுமதி, வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர் அனுப்பும் பணம், உள்ளூர் பங்குச்சந்தையில் தாராளமாக பரிவர்த்தனையாகும் வெளிநாட்டுப் பணம் ஆகியன காரணமாக நாட்டின் கையிருப்பு 200 கோடி டொலரைத் தாண்டிவிட்டது என்

(2 ஆம் பக்கம் பார்க்க)

வடபகுதி போர்முனைக்கு துருப்புக்களை ஏற்றி இறக்க

## தினசரி 4 லட்சம் ரூபா வாடகை செலுத்தி பழைய கப்பலை ஒழுங்கு செய்ய முயற்சி!

### உரிமையாளர்களுடன் சேர்ந்து ஊழல் அதிகாரிகள் சூழ்ச்சி

கொழும்பு, பெப். 23

வடபகுதி போர் முனைக்கு துருப்புகளையும், போர்த் தளபாடங்களையும் ஏற்றிக் கொண்டுபோய் இறக்கும் பணிக்காக பழைய கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்தும் முயற்சியில் அதிகாரிகள் சிலர் ஈடுபட்டுள்ளனர் என்றும்—

இதன் பின்னணியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தத்தை நடத்தும் முயற்சியில் தீவிரமாக உள்ள சில சக்தி மிக்க அதிகாரிகளே செயல்படுகின்றனர் என்றும்—

'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

அந்தப் பழைய கப்பல் துருப்புக்களை ஏற்றி இறக்குவதற்கு உகந்ததல்ல என்று தெரிந்திருந்தும் அக்கப்பலை நாள் ஒன்றுக்கு [illegible] டொலர் வாடகைக்கு அமர்த்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப் பழைய கப்பலை எப்படியாவது கடற்படையைக் கொண்டு வாங்கவைத்துவிட வேண்டும் என்று சிலர் திட்டமிட்டுள்ளனர் என்றும்—

அதனால் கிடைக்கும் [illegible]

(2 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். நீரேரியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக

## நாகதேவன்துறையில் மீண்டும் தளம் அமைப்பதற்கு முயற்சி?

கொழும்பு, பெப் 23

யாழ். நீரேரியில் ஏதாவது ஒரு வகையான கட்டுப்பாட்டை — பெரும்பாலும் நாகதேவன்துறையில் படைப் பிரிவு ஒன்றை — நிலை நாட்டும் முயற்சியில் படையினர் ஈடுபடக் கூடிய சாத்தியம் உண்டு என்றும் —

வடபகுதி மீது மேற்கொள்ளப்படவிருப்பதாகக் கூறப்படும் பாரிய இராணுவத் தாக்குதல் நடவடிக்கையின் ஒரு கட்டமாக நிச்சயம் இது இருக்கும் —

பாதுகாப்பு ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

முன்னர் போன்று யாழ். நீரேரியில் கடற்படையினர் தற்போது ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளாதபடியால் விடுதலைப் புலிகள் தங்களுக்குத் தேவையான ஆட்களையும் தளபாடங்களையும் எதுவித கஷ்டமும் இன்றி யாழ். குடாநாட்டின் பெருநிலப்பரப்புக்கு உள்ளேயும் வெளியேயும் எடுத்துச் செல்லக் கூடியதாக இருக்கின்றது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பூநகரி பேரழிவின் பின்னர் விடுதலைப் புலிகள் யாழ். நீரேரியை சுதந்திரமாகப் பயன்படுத்தி வருவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்த

[2 ஆம் பக்கம் பார்க்க]

## பெரும் கடல் தாக்குதலை புலிகள் நடத்தலாம் என அச்சம்

கடற் படையினரிடமிருந்து கைப்பற்றிய நீருந்து ('வாட்டர் ஜெட்') விசைப் படகுகளைப் பயன்படுத்தி பெரும் கடல் தாக்குதல் ஒன்றை விரைவில் நடத்த கடற்புலிகள் தயாராகி வருவதாக இரகசியத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இவ்வாறு பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பிலோ அல்லது காரைநகர் கடற்படை முகாம் மீதோ இத்தாக்குதல் நடத்தப்படக்கூடும் என கடற்படைக்குக் கிடைத்துள்ள இரகசியத் தகவல்களிலிருந்து தெரிய வருவதாகவும் கூறப்படுகிறது. (உ-6)

## அடுத்த மாத பிற்பகுதியில் முஹம்மது யாழ். வரலாம்

கொழும்பு, பெப். 23

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது நோன்பு முடிந்து அடுத்த மாத பிற்பகுதியில் யாழ் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மாதத்தில் சபாநாயகரை சந்திக்க விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்ததாகவும் ஆனால் நோன்பின் காரணமாக இம்மாதத்தில் தமக்கு வசதி இல்லை என்றும் —

நோன்பு முடிவடைந்த பின் சந்திப்பை ஏற்பாடு செய்யலாம் என்றும் சபாநாயகர் கூறியிருப்பதாக அறிய வருவதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசத் தயார் என்று சபாநாயகர் அறிவித்ததிலிருந்து விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ள வட்டாரங்கள் சபாநாயகருடன் தொடர்பு கொண்டு வருவதாகவும் —

சபாநாயகர் நோன்புக்குப் பின்னர் யாழ் சென்று விடுதலைப் புலிகளுடன் பேசப் போகிறார் என்ற தகவல் லண்டனிலும் அடிபடத் தொடங்கியுள்ளதாகவும் -

அரசியல் தீர்வு சம்பந்தமான முயற்சிகள் தற்போது தீவிரம் அடைந்து வருவதால் இச்சந்தர்ப்பத்திலேயே சபாநாயகரைச் சந்தித்துப் பேச விடுதலைப் புலிகள் ஆர்வம்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பொது இடங்களைத் தவிர்த்து இனிமேல் விமானத் தாக்குதல்

### பதவியேற்ற புதிய தளபதி கூறுகின்றார்

கொழும்பு, பெப். 23

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது கூட ஜேர்மனிலும் பிரிட்டனிலும் விமானக் குண்டு வீச்சில் தவறுதலாக தேவாலயங்களும் தாக்கப்பட்டுள்ளன.

எப்படியாயினும், வடபகுதியில் பாடசாலைகள், ஆலயங்கள் தேவாலயங்கள் மற்றும் ஆஸ்பத்திரிகள் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகாமல் பார்த்துக் கொள்ள விமானப்படை விசேட கவனம் எடுத்துக் கொள்ளும்.

விமானப்படையின் புதிய தளபதி ஒலிவர் ரணசிங்க 'லங்கா புவத்'துக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டாவது உலக யுத்தத்தில் தவறுதலாக தொழிற்சாலை ஒன்று விமானக்குண்டு வீச்சுக்கு இலக்கானது. அப்போது அத்தொழிற்சாலையில் இருந்த 600 தொழிலாளர்கள் உயிரிழந்தனர் என்றும் அவர் சொன்னார்.

இராணுவ உளவுப் பிரிவின் அங்கீகாரத்துடன் ஒழுங்குவிதிகளுக்கு அமையவே வடபகுதியில் உள்ள இலக்குகள் மீதுவான தாக்குதல்கள் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார். (உ-எ)

## இந்தியாவிலிருந்து ஆயுத குழு இங்கு நுழைந்து விட்டதாம்!

### கொழும்புப் பத்திரிகைச் செய்தி

கொழும்பு, பெப். 23

இந்தியாவிலிருந்து ஆயுததாரித குழு ஒன்று பாக்கு நீரிணையூடாக இலங்கைக்குள் நுழைந்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

இந்திய அரசின் [illegible] இந்த ஆயுததாரிதக் குழு [illegible] அனுப்பியிருப்பதாகவும் [illegible] தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் —

ஆயுதக் குழு எதுவும் இலங்கைக்குள் நுழைந்திருப்பது குறித்து நமக்குத் தெரியாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கூறியதாக "ஐலண்ட்" பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரையோரப் பகுதி சரியான முறையில் ரோந்து செய்யப்படாதபடியால் கண்டுபிடிக்கப்படாது ஆட்கள் நாட்டினுள் நுழைவது சாத்தியமானதே. கடந்த காலத்திலும் இப்படி நடந்துள்ளது.

ஆயுதக்குழு எதுவும் இந்தியாவில் இருந்து நாட்டினுள் நுழைந்ததாகக் கூறப்படுவது பற்றி இராணுவ புலனாய்வுப் பிரிவினர் அறிவிக்கவில்லை — என்று ஜெனரல் வனசிங்கா கூறியதாக "ஐலண்ட்" செய்

2 ஆம் பக்கம் பார்க்க)

திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்ட

## லெப். கேணல் கொத்தலாவல பூநகரித் தளபதியாக நியமனம்

கொழும்பு பெப் 23

சிங்க ரெஜிமென்டின் எட்டாவது பட்டாலியனின் கட்டளை அதிகாரியான லெப்டினன்ட் கேணல் ஜயந்த கொத்தலாவலை பூநகரிப்பிரிவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்றும்—

இவரே அங்கு அனுப்பப்பட்டுள்ள சிரேஷ்ட படைத் தளபதி என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாரத்தில் கடமையைப் பொறுப்பேற்ற லெப்டினன்ட் கேணல் கொத்தலாவலை பூநகரி செல்லலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் பிரச்சி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ இரகசியங்களை வெளியிடும் அதிகாரிகளுக்கு தளபதி கடும் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 23

பொதுசனத் தொடர்பு சாதனங்களுக்கு தகவல்களை வழங்கும் படை அதிகாரிகள் கடும் தண்டனைக்குள்ளாவார்கள் என்று இராணுவத் தளபதி ஜெரி டீ சில்வா எச்சரித்திருக்கின்றார்.

இது தொடர்பாக சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு கண்டிப்பான கடிதம் ஒன்றை தளபதி கடந்த வாரம் அனுப்பிவைத்தார்.

தொடர்பு சாதனங்களுக்கு தகவல்கள் வழங்கப்படக் கூடாது என்று தாம் விடுத்த உத்தரவை மீறுபவர்களை அடையாளம்காண பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் உதவி பெறப்படும் என்றும்— குற்றமிழைத்தவர்கள் மீது கடும் தண்டனை விதிக்கப்படும் என்றும் அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்திருக்கிறார்.

இராணுவத் தலைமைத்துவத்துக்கு அபகீர்த்தி ஏற்படக் கூடிய விதமான செய்தியை விரக்தியடைந்த சிலர் வெளியிட்டது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே, தளபதி அக்கடிதத்தை அனுப்பி வைத்தார் என்று ''சண்டே ரைம்ஸ்'' தெரிவித்திருக்கிறது. (உ-எ)

## கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

கைதடி சித்த மருத்துவத் துறையில் நடைபெற்று வரும் சித்தமருத்துவக் கண்காட்சி மேலும் இரு தினங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சி இன்றுடன் முடிவடைய இருந்தபோதும், பலரது வேண்டுகோளை அடுத்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## மெய்வல்லுநர் போட்டிகள்

அச்சுவேலி, பெப். 23

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் ஆரம்ப பிரிவு இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று புதன் கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரி மேரி எத்தலீனா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கோப்பாய்க் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் கலந்து கொள்கின்றார். (ஒ-11)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை சமூக விஞ்ஞான மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ''வடக்கு இழக்கில் சமூக சுகாதார கோட்பாடுகளும் அவற்றின் நடைமுறைத் தாக்கங்களும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று புதன் பிற்பகல் 3 மணிக்கு பொருளியல் துறை மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி தலைப்பில் மருத்துவபீட விரிவுரையாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் உரையாற்றுவார். [ஒ-5]

## ரெலோ — பொலீஸ் மன்னாரில் மோதல்

கொழும்பு, பெப். 23

மன்னாரில் ரெலோ இயக்கத்தினருக்கும் பொலீஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் ஸ்ரேஷன் வீதியில் அதிகாலை ஒரு மணியளவில் பொலீஸார் வாகனம் ஒன்றை மறித்தனர். ரெலோ உறுப்பினர் ஒருவர் செலுத்தி வந்த அந்த வாகனத்தில் சாக்குகள் இருந்தன. வாகனத்தைச் சோதிக்க பொலீஸார் முற்பட்டபோது, 25 ரெலோ உறுப்பினர்கள் வரையில் பொலீஸாரை சுற்றி வளைத்தனர் என்றும்—

பின்னர் பொலீஸாரைத் தாக்கி அவர்களிடமிருந்த தானியங்கி ரைபிள்களைப் பறிக்க முயற்சித்தனர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறையில் ஈ.பி.டி.பியினருக்கும் பொலீஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலை அடுத்து மன்னார் மோதல் இடம் பெற்றிருப்பதாக ''சண்டேரைம்ஸ்'' தகவல் வெளியிட்டிருக்கிறது. (ஒ-எ)

## கிரேக்க கப்பலில் கைதான 14 தமிழரில் 8 பேர் விடுதலை

கொழும்பு, பெப். 23

கொழும்பு துறைமுகத்தில் வைத்து கிரேக்க கப்பலில் கைது செய்யப்பட்ட 14 தமிழர்களில் எட்டுப் பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த 14 பேரில் 8 பேரை விடுதலை செய்த கொழும்பு நீதிவான் ஏனைய 6 பேரையும் 10 ஆயிரம் ரூபா உறுதிப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

சம்பந்தப்பட்ட ஆறு பேரிடமும் கப்பலில் வேலை செய்வதற்கான போலி ஆவணங்கள் இருந்ததாக பொலீஸார் தெரிவித்தனர்.

மேல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## உதவிப் பண கொடுப்பனவு

சுன்னாகம் சுந்தரோடையில் இயங்கும் தெல்லிப்பழை தபாலகத்தில் இன்று பொது சன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## தப்பி ஓடிய சிப்பாய்கள் 8 பேர் கைது

கொழும்பு, பெப். 23

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய எட்டு சிப்பாய்களை மகாவெல பொலீஸார் கைது செய்து இராணுவப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய பலர் மாத்தளை மகாவெல பகுதியில் உள்ளனர் என்றும்—

இவர்கள் அப்பகுதியில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் மகாவெல பொலீஸ் பொறுப்பதிகாரி குணரத்னா தெரிவித்தார். [ஒ-எ[

---

நாகதேவன்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானத் தீர்வு ஒன்றைக் காணவிரும்புவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதன் மத்தியிலும் —

விடுதலைப் புலிகள் குடாநாட்டில் தாங்கள் படைப் பலத்தை கட்டி எழுப்பி வருகின்றனர் என்றும் —

இன்னொரு பாரிய தாக்குதலுக்கு அவர்கள் தயாராகுகின்றனர் என்றும் பாதுகாப்பு பகுப்பாய்வாளர்கள் தெரிவித்தனர். (உ-எ)

---

ஐ நா .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை —

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதில் அக்கறை காட்டிவரும் நாடுகளின் ஆலோசனை பெறாமல் மனித உரிமை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்படும் எந்தப் பிரேரணையையும் இலங்கை அரசு ஆதரிக்காது என்று உயர் நிலை அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

---

தினசரி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதே அவர்களின் நோக்கம் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

படுகொலையுண்ட அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ கடற்படைத் தளபதியாக இருந்த போதும் இதே நபர்கள் இக் கப்பலை வாடகைக்கு அமர்த்தத் திட்டமிட்டிருந்தனர் என்பது தெரியவந்துள்ளது.

கப்பலின் உரிமையாளர்கள் ஊழல் அதிகாரிகளுடன் சேர்ந்து தமது கப்பலை வாடகைக்கு அமர்த்தும்படி அரசாங்கத்தைத் தூண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கப்பலைப் பார்வையிட்ட கடற்படை அதிகாரிகள் நாள் ஒன்றுக்கு சுமார் 4 லட்சம் ரூபா வாடகை (சுமார் 8 ஆயிரம் டொலர்) கொடுத்து இக்கப்பலை வாடகைக்கு அமர்த்த வேண்டிய தேவை இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

இக் கப்பலுக்கு நாள் ஒன்றுக்கு 32 தொன் எரிபொருள் தேவைப்படுவதாக மற்றொரு பாதுகாப்புப் படை அதிகாரி தெரிவித்தார்.

பாதுகாப்புடன் தொடர்புடைய ஊழல் அதிகாரிகள் தாம் விரும்பிய மாதிரி நடந்து பாதுகாப்பு நிலவரத்தை மோசமடையச் செய்ய அரசு அனுமதிக்கக் கூடாது என்று கடற்படை அதிகாரிகள் கூறுகின்றனர்.

கப்பலை வாடகைக்கு அமர்த்துவதற்கு சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளை அனுமதிப்பின் லட்சக்கணக்கான ரூபா பணத்தை அரசு இழக்கும் என்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அரசியல் தலைமை தலையிட்டு இப்பழங் கப்பலை வாடகைக்கு அமர்த்தும் முயற்சியை நிறுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-எ)

---

இந்தியா ''

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை ''றோ'' வின் கையாட்கள் கொண்ட குழு ஒன்று வடக்கிற்குள் நுழைந்திருப்பதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கூறியதாக ''லங்காபுவத்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலை சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை தேடிப்பிடிக்கவே ஆயுதக் குழு வடபகுதிக்குள் நுழைந்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகளில் கூறப்பட்டுள்ளது.

---

அடுத்த..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுவதாகக் கூறப்படுவதாகவும்—

புனித ரமழான் நோன்பு மார்ச் மாத நடுப்பகுதியில் முடிவடைந்ததும் அதன் பின்னர் சபாநாயகர் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் அரசியல் தீர்வு பற்றிப் பேசலாம் என தற்போது நம்பப்படுவதாகவும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

---

இலங்கைக்கு .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும்—

இது அரசாங்கத்தின் சரியான பொருளாதாரக் கொள்கைக்குக் கிடைத்த பலன் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் சர்வதேச அபிவிருத்திச்சங்கம் சலுகை அடிப்படையில் வழங்கவுள்ள 10 கோடி டொலர் நிதி உதவியை இலங்கை இதனால் இழக்க வேண்டி வரும் என்று பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றனர்.

குழுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதனால் காலித் துறைமுக அபிவிருத்தி, மாத்தறை - கதிர்காமம் ரயில் பாதை ஆகியவற்றுக்கு தேவையான நிதியைப் பெறுவதற்கு கொழும்பு அரசு 1995 வரை காத்திருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் முன்னர் உறுதியளித்த நாடுகள் உதவ முன்வராத காரணத்தினால் ஹிங்குராக் கொடையில் சர்வதேச விமான நிலையம் ஒன்றை அமைக்கும் திட்டத்தை அரசு கைவிட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

---


## பெண் மேற்பார்வையாளர் தேவை

மானிப்பாய் வீதி உரும்பிராயிலுள்ள ஞானசம்பந்தர் இல்லத்துக்கு பெண் மேற்பார்வையாளர் [மேற்றன்] தேவை

தகைமைகள்:—

1) நாற்பது வயதிற்கு மேற்பட்டவராகவும்
2) தேக ஆரோக்கியமுடையவராகவும்
3) குடும்பப் பொறுப்பு அற்றவராகவும்
4) குறைந்தது க. பொ. த. சாதாரண தரம் வரை படித்தவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உடையோர் 27-02-94 இற்கு முன்னர் கீழ்க் காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

வேதனம் நேரில் தீர்மானிக்கப்படும்.

தலைவர்
ஞானசம்பந்தர் இல்லம்
மானிப்பாய் வீதி,
உரும்பிராய்.

(சி/7267)



## கண்ணீர் அஞ்சலி

திருமதி

**விஜயலட்சுமி அற்புதராசா (B. A.)**

(ஆசிரியை நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தி)

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி விஜயலட்சுமி அற்புதராசா அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது அதிர்ச்சியையும் அனுதாபத்தையும் அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யாழ். நல்லூர் தெற்கு.
ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்,
நல்லூர் கச்சேரி வீதி,
யாழ்ப்பாணம்.

[29588]



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 06 — 03 — 1918

மறைவு: 05 — 03 — 1993

உயர்திரு

**சோமநாதபிள்ளை கந்தையா**

(இளைப்பாறிய ஆசிரியர் - வேலணை)

திதி: 23 - 02 - 1994

ஆண்டொன்று கடந்து போனதே...... இன்று!
குலதெய்வமே!
அன்பின் ஊற்றாய் பண்பில் இமயமாய்
பாசத்தின் உறைவிடமாய்
வாழ்வில் ஒளிகாட்டியாக் ஆனாயே!
உங்கள் அன்பு முகம் மறக்க முடியவில்லையே!!
கடந்தகால நினைவுகள் எமை வாட்டுதே! ...! ...!
ஐயா!

உங்கள் ஆத்மா சாந்திபெற நிதமும் இறைவன் கழல் இறைஞ்சும்


— குடும்பத்தினர்

32/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(29590)



## மூன்றாம் ஆண்டு நினைவு நாள்



**செல்வி வசந்தி திருவிளங்கம் (விஜி)**

மலர்வு: 02 - 08 - 1968

உதிர்வு: 26 - 02 - 1991

திதி: 23 - 02 - 1994

காலமெல்லாம் எம்மோடு வாழ்வாய் என்றிருந்தோம்
இறைவன் தனதாக்கிக் கொண்டான்

பிரிவுத்துயரில்
குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்.

சாஸ்திரியார் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

(29592)



**A/L 94 PHYSICS**

மீட்டல்

ஆரம்பமாகியுள்ளது

Mr. மோகன் B. SC

SHAMROCK

யாழ் சுண்டுக்குளி

(29586)



## வாரிவளவு நல்லியக்கச் சபை

காரைநகர்

காரைநகர் மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு பரிசில் வழங்கும் நிகழ்வுகள் — 1994 (சித்திரை தமிழ் புத்தாண்டு)

இந்நிகழ்வு பற்றிய மேலதிக விவரங்களுக்கு 1994 — 02 — 27 நாளிதழைப் பார்க்கவும்

செயலர்

148/10, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[29584]



## யாழ்/தொழில்நுட்பக் கல்லூரி மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் அவையினால் 1994 கழக ஆண்டு மாணவர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும்.

வியாழன், வெள்ளி (24-02-94, 25-02-94)
காலை 10 - 1 மணிவரை

சனி, ஞாயிறு (26-02-94, 27-02-94)
மாலை 1 — 4 மணிவரை

(29583) — மாணவர் அவை.



உ

காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை
நீர்வேலி

ஸ்தாபகர் சமூகத்தொண்டன்

**சி. தர்மலிங்கம் நினைவு நாளும் சமயபாடப் பரீட்சை பரிசளிப்பு விழாவும்**



இடம்: நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலய வீதி

தலைவர்: திரு. க. சின்னராசா (மேற்படி சபைத் தலைவர்)

காலம்: 23 — 02 — 1994 (இன்று) பிற்பகல் 3-30

பிரதம விருந்தினர்: சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

ஸ்தாபகர் நினைவுரை: திரு எஸ் சிவலிங்கராசா (தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்புரை: திரு. பொ. வீரபத்திரன் (கோட்டக்கல்வி அதிகாரி, கோப்பாய்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

— மேற்படி சபையினர்

நீர்வேலி [29579]



ஜேர்மன் சமஷ்டி குடியரசின் நிதி உதவியுடன்

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (ரி. ஆர். ஆர் ஓ)

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இணைந்து நடத்தும்

**"விவசாய பயிற்சி நெறிகள்"**

பொது விவசாயம்
பூங்கனியியல்

ஆரம்பமாகின்றன.

தகைமை:- க. பொ. த. (சாதாரணதரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

காலம்:- 03 மாதங்கள்
சனி, ஞாயிறு நாட்களில் மட்டும் பயிற்சி நடைபெறும்.

குறிப்பு:- இடம் பெயர்ந்த 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர் 26-02-94 சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்விச் சான்றிதழ், அண்மையில் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்கள் ஆகியவற்றுடன் கீழ் காணும் விலாசத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

ரி. ஆர். ஆர். ஓ. உபகாரியாலயம்

மானிப்பாய் வீதி,
உரும்பிராய்.

(சி/7288)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராமரிப்பு சேவை

நோயாளர் பராமரிப்பாளர்களாகப் பணிபுரிய விரும்பும் இருபாலாரும் (வயதெல்லை கிடையாது) தத்தமது தகைமைகளுடன், குடும்ப விவரங்களையும் குறிப்பிட்டு:

நோயாளர் நலன்புரிச் சங்கம்,
இல. 572, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு 01 – 03 – 1994க்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

— நிர்வாகப் பொறுப்பாளர்.

நோயாளர் நலன்புரிச் சங்கம்,
யாழ். போதனா மருத்துவமனை. (29575)



## நெல்லியடியில் பொய்க்கால்

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மாணவர் மன்ற நிதிக்காக

கலைப்பீட மாணவர்கள் வழங்கும்

**பொய்க்கால் (நாடகம்)**

16 ஆவது தடவையாக மேடையேறுகின்றது.

காலம்:- 23-02-1994 புதன்கிழமை (இன்று)
பி. ப.4.00 - 6.00 (இருகாட்சிகள்)

இடம்:- வட மத்திய மகளிர் கல்லூரி
(நெல்லியடி)

அன்பளிப்பு: 10/-

விளம்பர அன்பளிப்பு;

NEW SITTAMPALAM STORES
NELLIADY,
KARAVEDDY (29568)



## YOGI HOME SCIENCE ACADEMY

Kachcheri Nallur Road, Nallur.

நடைபெறவிருக்கும் கேக் கண்காட்சியில் பங்கு கொள்ளவிருக்கும் எனது மாணவியர் அனைவரும் 27 – 02 – 94 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கிற்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

— நிர்வாகி.

(சி 7263)



## வேலை வாய்ப்பு

### உள்ளகக் கணக்குப் பரிசோதகர்

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

1. க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் உட்பட ஆகக் குறைந்தது மூன்று வர்த்தகப் பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
2. கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (Diploma in Accountancy) சான்றிதழ் அல்லது சீ. ஐ. எம். ஏ. (C I M. A.) பகுதி 1-3 சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

   (1லும், 2லும் குறிப்பிடப்பட்டவர்கள் பிரபல்ய தனியார் / அரச நிறுவனங்களில் 3 வருட அனுபவம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.)
3. அரசாங்க / தனியார் சேவையில் இருந்து இளைப்பாறியவர்கள் ஆகக் குறைந்தது பத்து வருடங்கள் கணக்குப் பகுதிகளில் வேலை செய்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் 25 – 02 – 1994, 26 – 02 1994 ஆகிய தினங்களில் காலை 10-00 மணிக்கு தங்கள் விண்ணப்பத்துடனும் சான்றிதழ்களுடனும் காங்கேசன்துறை வீதியில் கொக்குவில் 30, இலக்க இல்லத்திற்கு வரவும்.

இல. 30,
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில். [சி-7266]



## நினைவு கூரல் ஆராதனையும் அஸ்தி அடக்கமும்

திருமதி
### றோஸ் அழகமலர் லூதர் இராஜரட்னம்

இயற்கையுள் நிறைவெய்திய, திருமதி றோஸ் அழகமலர் லூதர் இராஜரட்னம் அவர்களின் நினைவு கூரலும், அஸ்தி அடக்கமும் எதிர்வரும் சனிக்கிழமை 26 – 02 – 1994 பிற்பகல் 3-30 மணிக்கு நல்லூர் பரிசுத்த யாக்கோபு ஆலயத்தில் நடைபெறும்.

அன்னார் லூதர் இராஜரட்னத்தின் அன்பு மனைவியும், திருமதி பி. தனபாலனின் தாயாரும், திரு. எஸ். தனபாலனின் (அதிபர், பரி. யோவான் கல்லூரி) மாமியாரும், சுதர்ஸனின் அம்மம்மாவும் ஆவார்.

இவ் ஆராதனையில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்:

தகவல்:
லூதர் இராஜரட்னம்.

964, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.


# தவறு செய்வோருக்கு மன்னிப்பு துரோகிகளுக்கு மன்னிப்பு இல்லை

## அமைச்சர் தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, பெப். 23

என்ன அநீதி இழைக்கப்பட்டாலும் அதற்குப் பயந்து ஒடுங்கி நடப்பவன் இந்த தொண்டமான் அல்லன். இந்த மண்ணில் பிறப்பவர்கள் எல்லோரும் ஒரு நாள் இறப்பது உறுதி. நாம் ஒற்றுமையுடனும் கட்டுப்பாடுடனும் இருந்து செயற்படும் இவ்வேளையில் எம்மைக் காட்டிக்கொடுப்போரை எவ்வாறு மன்னிக்க முடியும்? தவறு செய்பவர்களை மன்னிக்கலாம். காட்டிக்கொடுக்கும் துரோகிகளை மன்னிக்க முடியுமா?

மேல்மாகாண சபை இ. தொ. கா. அமைப்பாளர்களின் கூட்டத்தில் பேசிய கிராமிய கைத்தொழில் துறை, சுற்றுலாத்துறை அமைச்சரும், இ. தொ. கா. தலைவருமான திரு. தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனைப் பிக்கரிங்ஸ் வீதியில் உள்ள இ. தொ. கா. அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

அமைச்சர் தொண்டமான் இக்கூட்டத்தில் மேலும் பேசியதாவது;

எமது ஒருமித்த கட்டுப்பாடு, ஒற்றுமையின் காரணத்தினாலேயே செல்லச்சாமி இன்று அமைச்சராக இருக்கிறார். டி. வி. சென்னன் ஒரு சாதாரண தொழிலாளி. அவர் இன்று பதுளை மாவட்ட எம். பியாக இருக்கிறார். இதற்கு நான்தான் காரணம் அல்லன். நாம் ஒற்றுமையாகவும் கட்டுப்பாட்டுடனும் இருப்பது தான் காரணம்.

ஒரு பெரிய அமைச்சராக இருக்கும் செல்லச்சாமியை எவ்வித பீதியும் கொள்ளாது இ. தொ. கா. தூக்கி எறிந்துவிட்டது. எம்மை சிங்களவர்களும் மதிப்பதற்கு இந்தகைய நடவடிக்கைதான் காரணம்.

### செல்லச்சாமிக்கு உணவு தர மறுப்பு

சமீபத்தில் திருமண வீடு ஒன்றுக்கு செல்லச்சாமி சென்றிருந்தபோது அங்குள்ள சமையல்காரர்கள் கூட அவருக்கு உணவு பரிமாற மறுத்துவிட்டனர். இத்தகைய சில சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. ஆகவே இனி எமது சமூகத்தில் 50 ஆண்டுகளுக்கு இந்த மாதிரி எவரும் காட்டிக் கொடுக்கமாட்டார்கள். பட்டம், பதவி பணத்துக்காகக் காட்டிக் கொடுக்கும் இவர்களை முழுத் தமிழர்களுமே எதிர்க்கின்றனர்.

இப்படி அமைச்சர் தொண்டமான் கூறினார்.

பெரும்பான்மை மக்கள் பெரிய மரம் அதில் படரும் கொடிகளே இறுபான்மையினர் என்ற கூற்றையும் அவர் தமது உரையின்போது நிராகரித்தார். (இ)

# பயமுறுத்தலுக்கு மத்தியிலும் கூட்டத்தில் தொண்டமான்!

கொழும்பு, பெப். 23

அமைச்சர் திரு. தொண்டமான் கொட்டாஞ்சேனை பிக்கரிங்ஸ் வீதியில் நடைபெற்ற கூட்டத்துக்குச் செல்ல இருந்த சமயம், அக்கூட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது என அவருக்கு தொலைபேசி மூலம் பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாம்.

அந்த பயமுறுத்தலுக்கு மத்தியிலும் அவர் கூட்டத்தில் கலந்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அநாமதேய தொலைபேசிப் பயமுறுத்தல் அமைச்சர் தொண்டமானின் வாசஸ்தலத்திற்கும், அவரது அமைச்சின் காரியாலயத்திற்கும் இ. தொ. கா. தலைமையகத்திற்கும் விடுக்கப்பட்டதாக கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்று தெரிவித்தது. (ஒ-5)

## ஆலயங்களில்

நல்லூர் ஸ்ரீ வாலையம்மன் கோயில் அலங்கார உற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுதினம் வெள்ளிக்கிழமையும் நடைபெறும். (க-162)

★ ★ ★

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 10 ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா 11 ஆம் திகதியும் நடைபெறும். (க)

★ ★ ★

யாழ் வண்கிழக்கு கலட்டி எச்சாட்டி மகாமாரியம்பாள் கோயிலில் நாளை வியாழன் காலை 9 மணிக்கு, சப்பற வெள்ளோட்ட விழா நடைபெறும்.

நல்லை குருமகாசந்நிதானம் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை நிகழ்த்துவார். (ஒ)

## பரிசளிப்பு விழா

நீர்வேலி, பெப். 23

நீர்வேலி காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபை நடத்திய சமய பாடப் பரீட்சையின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை நீர்வேலி காமாட்சி அம்பாள் கோயில் வீதியில் இடம்பெறும்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ 110)

## 3 தமிழர்கள் காலியில் கைது

கொழும்பு, பெப். 23

தொழில் பெறுவதற்காக வடபகுதியில் இருந்து காலிக்குச் சென்ற 3 தமிழர்களை காலி விசேட பொலிஸ் பிரிவினர் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களது பெயர், விவரங்கள் அறிவிக்கப்படவில்லை. (ஒ-க)


## துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா

அவர்களின

## பிரியாவிடை வைபவம்



துணைவேந்தர் அ. துரைராசா அவர்களின் சேவையைப் பாராட்டி
துணைவேந்தர் அவர்களுக்கு
யாழ் பல்கலைக் கழக விளையாட்டு ஆலோசனை சபையும்
விளையாட்டு அவையும்
இணைந்து

நாளை 24-02-1994 (வியாழக்கிழமை) மாலை 4-00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பிரியா விடை வைபவம் ஒன்றை நடத்துகிறது.

இவ்வைபவத்தில் சிறப்பு நிகழ்ச்சியாக
SHOTOKAN KARATE INTERNATIONAL FEDERATION NORTHERN PROVINCE SENSEI
S. தர்மராசா
(2nd Dan Black Belt, Chief Instructor Examiner)
அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட
கராத்தே கண்காட்சிகளும் இடம்பெறவுள்ளன

இவ் வைபவத்தில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Shotokan Karate International Federation-
(Northern Province)

[29580]



யாழ்ப்பாண வண்கிழக்கு
கலட்டி எச்சாட்டி அருள்மிகு

## மகாமாரியம்பாள் தேவஸ்தானம் சப்பற வெள்ளோட்ட விழா

காலம்; 24–02–1994 வியாழக்கிழமை
நேரம்; காலை 9-00 மணி

ஆசியுரை:
நியாயசிரோன்மணி பிரம்மஸ்ரீ
கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள
(அதிபர், சிவானந்த குருகுலம்)
பிரம்மஸ்ரீ வை. கருணாகரேஸ்வரக்குருக்கள்
(பிரதம குரு, கலட்டி அம்மன் தேவஸ்தானம்)

அருளுரை:
நல்லை குருமகா சந்நிதானம், -
சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

சிறப்புரை / வரவேற்பு:
திரு. சி. ஸ்ரீஸ்கந்தராஜா
(விழா உபயகாரர்)

நன்றியுரை:
திரு சு. பத்மநாதன்

மாலை 6-00 மணிக்கு அர்ச்சையம்பாள் புதிய சப்பறத்தில் ஆரோகணித்து திவனம் வரும் காட்சியும் இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் வெள்ளோட்டத்திலும், சப்பறத் திருவிழாவிலும் பங்குபற்றி அம்பிகையின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கிறோம். அத்துடன் விசேட மேளக்கச்சேரியும் இடம்பெறும்.

திரு. சி. ஸ்ரீஸ்கந்தராஜா,
திருவிழா உபயகாரர்.

(29577)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ். நகரில் வீடு ஒன்றும், சண்டிலிப்பாயில் நான்கு பரப்பு பனங்காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சோமஸ்ரான் கராஜ். இல. 180, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (29578)

## SPOKEN ENGLISH

பேசும் ஆங்கிலத்தை இலக்கணத்துடன் (3 மாதத்தில்) இலகுவாகவும், சுலபமான முறையிலும் கற்க விரும்பும் மாணவர்களுக்குரிய புதிய பிரிவுகள் (25-2-94) வெள்ளி ஆரம்பமாகின்றன. தொடர்பு: R. Sivalingam (Dip-in-Eng.) புதிய ஆங்கில கல்வி நிலையம், 82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம். (29576)

## மணமகன் தேவை

யாழ். இந்து 25 வயது நல்ல உயர் குடும்பத்தைச் சேர்ந்த சித்திரை 3ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமில்லாத, 5'-3'' உயரமுள்ள, வேம்படியில் படித்து A/L சித்தியடைந்த, Diploma [Computer Studies] செய்த அழகான பெண்ணுக்கு இலங்கையில் / வெளிநாட்டில் வேலைபார்க்கும் உயர்கல்வியுடைய மணமகன் தேவை. ஜாதகக்குறிப்பு, முழு விவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். 613, மே/பா உதயன். (29500)

## கணக்காளர் தேவை

G. C. E. A/L கணக்கியல் படித்த பெண் கணக்காளர் தேவை. ஆங்கில, தமிழ் தட்டச்சு (Typing) தெரிந்திருத்தல் வேண்டும். யாழ். மாநகர சபைக்கு அண்மையில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும், கு. வி. அச்சகம், புத்தக விற்பனை நிலையம், 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (6986)

## மாணவர்களே!

உங்கள் பாடசாலைத் தேவைகளைப் பூர்த்தி செய்திட இன்றே வாரீர், ஆனந்த்ஸ் புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6989)

## MATHS

ஆண்டு 5லிருந்து O/Lவரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறுடைய கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோசேத்திரா வீதி. சுண்டிக்குளி (6987)

## வகுப்புகள்

கிற்றார், வயலின் புதிய வகுப்புகள் ஆரம்பம்! (ஞாயிறு) 27-2-94 (9-30 a. m) இடம்: யாழோசை, ஆனைப்பந்தி (29528)

## பாலர் ஆசிரியர் ஆகலாம்

கடைசித் தகமை க.பொ.த. (சா/த) சனி, ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கலலூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6994)

## ஆய்வரங்கு

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஆய்வரங்கு ஒன்று யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் ஆய்வரங்கில் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ''தமிழ் இலக்கியத்தில் பெண்களின் இழிநிலைமைகள்'' எனும் தலைப்பில் ஆய்வுரை வழங்குவார். (க)

## ப. நோ. கூ. ச. புதிய கிளைகள்

யாழ்ப்பாணம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மேலும் இரண்டு கிளைகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

சங்கத்தின் இல. 24 கிளை கொய்யத்தோட்டத்தில் இன்றுபுதன்கிழமையும் இல 18 கிளை அரியாலை காந்தி நிலையத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் திறந்து வைக்கப்படும்.

சங்கத் தலைவர் ஆ. சிறிஇவற்றைத் திறந்து வைப்பார். (க-17)

---

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

காலம்: 20-03-1994 ஞாயிறு மு.ப 10மணி
விடயம்: புதிய நிர்வாகசபை அங்கத்தவர் தெரிவு
இடம்: பாடசாலை மண்டபம்.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் கொடுக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம். புதிய அங்கத்தவர்களாகச் சேர விரும்புபவர்கள் 10-03-1994ஆம் திகதிக்கு முன்னர் சேர்ந்து கொள்ளலாம்.

(6993) — செயலாளர்.

---

## வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி

## DIPLOMA IN COMPUTER PROGRAMMING

### புதிய பிரிவுகள் ஆரம்பம்:

வார நாள் வகுப்புக்கள்: **25 - 02 - 1994**

வார இறுதி நாள் வகுப்புக்கள்: **26 - 02 - 1994**

"WE MAKE IT BETTER"

★ இப்பயிற்சி நெறியில் BASIC Language (G. W. BASIC / B. Bc. BASIC) ஐ தெரிவு செய்யலாம்.
★ தமிழ் விளக்கத்துடன் கூடிய இலகு விரிவுரையும் குறைந்த மாத கட்டணமும்.
★ கூடிய செய்முறைப் பயிற்சியும் திறமையான மாணவர்களுக்கு விசேட பயிற்சிக் காலம்.

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 St. Peter's Lane,
Hospital Road, Jaffna.

[சி-7259]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் பொன்னையா சிவகுரு

(பெருங்குடி விவசாய மன்னன், 7ஆம் வாய்க்கால் கிளிநொச்சி)

மலர்வு: **12-04-1928** உதிர்வு: **23-01-1994**

எவரினி இவர்போல் ஏர்க்கொடி ஏற்றுவார்

ஏர்முனை சிறுற ஈட்டிய முயற்சியும்;
ஊர்உற வேடாவர் உவப்புற வாழ்ந்ததும்;
பெருங்குடிக் கமத்தொடு பெயருற உயர்ந்ததும்;
அரும்பொருள் தேடியே அமர்ந்ததும்; இல்லறம்
விரும்பிய வாறே பெரும்புகழ் பெற்றதும்
தரும்பெயர் சிவகுரு மன்னவ னாயினர்
இவரது பிரிவினால் நிலமகள் அழுகிறாள்
எவரினி இவர்போல் ஏர்க்கொடி ஏற்றுவார்.

இன்று (23-02-94) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளில் கலந்து, அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சகோதரன்.

மடத்தடி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி. (29562)

---

## விற்பனையாகின்றன!

மக்கள் வங்கி எழுதுவினைஞர் /
ஆங்கில உதவி ஆசிரியர்

## போட்டிப்பரீட்சைகளுக்கான வழிகாட்டி

* பொதுவிவேகம், மொழித்திறன்
* English Teachers Exam Guide

வெளியீடு: **அஸ்ரன்**

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
(சி/7408)

---

## தேவை

சித்திரக் கலையில் ஆர்வமுள்ள றீ - ரச்சிங் (Re-Touching), பினிசிங் (Finishing) ஸ்ருடியோ வேலை பழக விரும்புபவர்கள், 05 - 03 - 1994 இற்கு முன் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.

**சித்திராலயா**
18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[சி-7407]

---

## இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்

## 14ஆவது இசை விழா

கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

### பன்னிரண்டாம் நாள் - இன்று

உதயன் பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவில்

மாலை

**4-00 — 5-00** மங்கள இசை
ஏ. மகேந்திரன், கே. கிருஷ்ணதாஸன், எஸ். தேவதாஸன் — நாதஸ்வரம்
என். ஜெயானந்தன், என். மூர்த்தி, ஜே. கண்ணன் — தவில்

**5-00 — 5-20** பாட்டு
வை. கல்யாணி, வை. யசோதை, எஸ். சசிரேகா — பாட்டு
சுகிர்தா — வயலின்
எஸ். மகேந்திரன் — மிருதங்கம்

**5-20 — 5-40** புல்லாங்குழல்
ரஞ்சனி ராமலிங்கம், இந்திரா பொன்னுத்துரை, சுரேந்தினி சிதம்பரநாதன் — புல்லாங்குழல்
க. சுஜித்ரா — வயலின்
ம. கஜன் — மிருதங்கம்

**5-40 — 6-15** பாட்டு
தி. சந்தானலட்சுமி — பாட்டு
எஸ். வெங்கடேஸ்வர சர்மா — வயலின்
சதாவேல்மாறன் — மிருதங்கம்

**6-15 — 7-00** பாட்டு
சக்திதேவி சிவகுமார் — பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்

**7-00 — 7-30** மங்கள விளக்கேற்றல்
வி. எஸ். பாலச்சந்திரன்,
எஸ். சுப்பிரமணியம் (பொம்பே)
செல்வரெட்ணம் (செல்வம்ஸ் நெடுங்கேணி)
கு. இராமசந்திரன் (கோல்டன் செரமிக்)

அருள் உரை:
திரு. பிரம்மஸ்ரீ ஜெயந்திநாதக்குருக்கள்
(பிரதமகுரு, நந்தாவில் அம்மன் தேவஸ்தானம்)

தலைவர்:
திரு. மனோன்மணி சண்முகதாஸ், எம். ஏ.

பிரதம விருந்தினர்:
திரு. ஈ. சரவணபவன்
(நிர்வாக இயக்குநர், உதயன் நிறுவனம்)

சிறப்பு விருந்தினர்:
திரு. கே. எம். பஞ்சாபிகேசன்
(நாதஸ்வர வித்துவான்)

**7-30 — 8-30** வீணை இசை
நந்தினி விஜயரத்தினம் — வீணை
எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
சதா வேல்மாறன் — கடம்

**8-30 — 9-30** பரதநாட்டியம்
திருமறைக் கலாமன்ற மாணவிகளும் நளாயினி இராஜதுரை அவர்களின் மாணவிகளும் இணைந்து வழங்குவர்.
தயாரிப்பு: நளாயினி இராஜதுரை அவர்கள்

கலா ரஸிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்:
**"இராஜன் இசையகம்"**
**இசைக் கருவி திருத்தகம்,**
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
[சி-7321]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## குறை கூறிப் பயன் என்ன?

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகரித்திருப்பதற்கான தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது. பிந்திய புள்ளி விவரங்களின் பிரகாரம் தமிழ்ப் பகுதிகளில் மொத்தம் ஆறாயிரம் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை உண்டு. வடக்கு-கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். மகாலிங்கம் இந்த விவரத்தை வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்ப்பகுதிகளில் ஆசிரியர் பற்றாக்குறை என்பது புதிய விடயமல்ல. அது நிரந்தரமானது. மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்கள் சேவையில் இல்லை என்ற குறைபாடு கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன ஒன்றாகி விட்டது.

இந்த நிலைமைக்கு ஓர் அடிப்படைக் காரணம் உண்டு. தமிழ் மக்களின் கல்வி நிலையை மேம்படுத்த வேண்டும் என்பதில் அரசுக்கு அக்கறை இல்லை; விருப்பமும் இல்லை. அதற்கு மாறாக தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சியை நசுக்கித் தண்டிக்க வேண்டும் என்பதே அரசின் உள்ளார்ந்த நோக்கம்,

தமிழர்கள் சிறுபான்மையினராக இருப்பதால் அவர்களை அடக்கி ஆளவேண்டும் என்பது சிங்களப் பேரினவாதத்தின் 'சித்தாந்தம்'. ஆனால் தமிழர்கள் கல்வி நிலையில் வளர்ச்சி கண்டதால் அவ்வாறு செய்வது கடினமாக உள்ளது. அதனால் தமிழர்கள் கல்வி நிலையில் தாழ்ந்து போகட்டும் என்ற நோக்கத்துடனேயே அரசினரும், அரச அதிகாரிகளும் செயற்படுகிறார்கள்.

இது இன்று நேற்று ஆரம்பமானது அல்ல. 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடங்கப்பட்டது. ஆசிரியர் நியமனத்தில் மட்டுமல்ல தமிழர் கல்வி சம்பந்தமான சகல வசதிகளும் குறைக்கப்பட்டு விட்டன. சகல வளங்களும் தேய்ந்துபோய்விட்டன.

வடக்கு-கிழக்கில் மாகாண சபை என்ற அமைப்பு வந்த பின்னரும், தமிழர்களின் கல்வி வளர்ச்சிக்குரிய அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியவில்லை என்பது நடைமுறை உண்மையாகிவிட்டது. ஆசிரியர் நியமனமும் அத்தகைய அடிப்படைத் தேவைகளில் ஒன்றே

மேலும் யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலத்தில் கல்வித் தரம் எழுபது சத வீதம் வீழ்ச்சி கண்டிருக்கிறது என்ற தகவலையும் இங்கே கவனத்தில் எடுக்க வேண்டும். இங்குள்ள கல்வி அதிகாரிகள் உள்ளூர உள்ள சில குறைபாடுகளே அந்த வீழ்ச்சிக்குக் காரணம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் தமிழர் கல்வியைப் பொறுத்த அரசின் நோக்கும், போக்கும், செயற்பாடும் இந்த வீழ்ச்சிக்குப் பிரதான காரணம் என்பதனை மறைத்து விட முடியாது.

மாணவர்கள் கல்வி கற்பதற்கான புறச்சூழ்நிலை கெடுக்கப்படுவதையும் கணக்கில் சேர்க்காமல் இருக்கமுடியாது. விமானத் தாக்குதல், ஷெல் வீச்சு, போசாக்குக் குறைவு என்பன கல்வி பயில்வதற்கான புறச்சூழலைக் கெடுக்கின்றன.

தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் மாணவர்களின் கல்விக்கான புறச்சூழலைப் பாதிப்புறச் செய்யும் அரசாங்கம், ஆசிரியர் நியமனம் மற்றும் கல்வி வளங்களைப் பெருக்குதல் ஆகியவற்றில் கரிசனை கொள்ளும் என்று எதிர்பார்ப்பது எவ்வாறு?

தமிழர்கள் கைக்கு ஆட்சி அதிகாரம் வரும்வரை இந்த நிலையே தொடரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. எனவே தமிழர்கள் தங்கள் கல்வி நிலை பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, சுயமாகத் தொழிற்பட வேண்டிய தேவை உருவாகியுள்ளது. தங்களுக்கென கல்வித் திட்டத்தை மட்டுமன்றி, கல்வி நிர்வாக அமைப்பையும் உருவாக்க வேண்டும். வெறுமனே சிங்கள அரசு மீது குறை கூறிக்கொண்டும், வசை பாடிக் கொண்டிருக்கும் பயனில்லை. ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும்.

# அரசு யுத்தத்தில் தரையில் தான் வெற்றிபெற வேண்டும்; வானிலல்ல!

வானில் நாம் ஆதிக்கம் செலுத்த வேண்டியதில்லை. தரையில்தான் ஆதிக்கம் செலுத்த வேண்டும் விமானப் படை எப்போதுமே வானில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு வான் வழியாக துருப்புக்களையும், பொருள்களையும் கொண்டு சென்று இறக்க விமானப் படையால் முடியும்.

ஆனால் தரையில்தான் நாம் யுத்தத்தில் வெற்றியீட்ட வேண்டும். வானில் அல்ல.

ஸ்ரீலங்கா விமானப்படையின் புதிய தளபதியாகப் பதவியேற்றுள்ள எயர்மார்ஷல் ஒலிவர் ரணசிங்க சண்டே ஐலண்ட் வார இதழுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்.

விமானப்படைத் தளபதியின் பேட்டி வருமாறு:

கேள்வி: வடக்கு - கிழக்கு யுத்தத்துக்குத் தேவையான போர்த் தளபாடங்கள் விமானப்படையிடம் உள்ளனவா?

தளபதி: எம்மிடம் இப்போது நிறைய விமானங்கள் உள்ளன. தற்போதைக்கு இவ்வளவு விமானங்களும் போதுமென்று நான் நினைக்கின்றேன்,

### போதுமான விமானங்கள் எம்மிடம் உள்ளன

தரைத் தாக்குதலுக்கோ அல்லது துருப்புகளை ஏற்றி இறக்குவதற்கோ அல்லது எந்தவிதமான பணிகளையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான விமானங்கள் எம்மிடம் உள்ளன.

இன்று எமது தேவை என்னவென்றால் எம்மிடம் உள்ள போர் விமானங்களை கூடுதலாக சேவையாற்றக் கூடிய நிலையில் வைத்திருக்க வேண்டியிருக்கிறது

எம்மிடம் போதுமான போர்விமானங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை தேவைப்படும் நேரத்தில் பல காரணங்களின் நிமித்தம் சேவைக்குப் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளன. இப்போர் விமானங்களை சாத்தியமான அளவுமிக விரைவாக, வானில் பறக்கக்கூடிய நிலைக்குக் கொண்டு வரவேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது.

கேள்வி: முப்படைகளும், ஒன்றிணைந்து நல்ல முறையில் செயல்படுகின்றன என்று கூறுகிறீர்களா? அல்லது முப்படைகளிடையே மேலும் ஒருங்கிணைப்பு ஏற்பட வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

### கருத்து வேற்றுமைகள் ஏற்படுவதும் உண்டு

தளபதி: கடற்படை மற்றும் இராணுவம் ஆகியவற்றுடன் விமானப்படை எந்த வழியிலும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. இருந்தும் சில சமயங்களில் கருத்து வேற்றுமைகளும் ஏற்படுவதுண்டு.

உதாரணமாக — துருப்புக்களைக் கொண்டு செல்வதிலும் விநியோகங்களை வழங்குவதிலும் விமானப்படையின் வேகம் காணாது என்று இராணுவம் உணரக்கூடும். உண்மையில் எம்மால் எவ்வளவு திறமையாக பணியாற்ற முடியுமோ அப்படியே செய்து வருகிறோம். விமானப்படை வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டியுள்ளது.

இராணுவம் மற்றும் கடற்படை ஆகியன விடுக்கும் கோரிக்கைகளிலும் பார்க்க வேறு முக்கியமான விஷயங்களுக்கும் விமானப்படை முக்கியத்துவம் கொடுக்க வேண்டியுள்ளது.

கேள்வி: இராணுவம் மற்றும் கடற்படையினருக்குத் தேவையான துருப்புகள் மற்றும் பொருள்களை ஏற்றி

## விமானப் படை புதிய தளபதி பேட்டி

இறக்குவதில் விமானப் படைக்கு பிரச்சினை உண்டா?

தளபதி: போக்குவரத்து நோக்கங்களுக்குப் பயன்படுத்த எம்மிடம் போதுமான விமானங்கள் உள்ளன. 8 அவ்ரோக்கள், 3 வை - 8 போர் விமானங்கள் 9 வை-12 போர்விமானங்கள் உள்ளன. இவை தற்போதைய தேவைக்கு அதிகமானவை.

ஆனால் தேவைப்படும் சமயத்தில் இவை அனைத்தையும் பயன்படுத்த முடியாமல் உள்ளது தான் இப்போது உள்ள பிரச்சினை. பல காரணங்களுக்காக இவ்விமானங்கள் பறக்க முடியாமல் உள்ளன. இவ்விமானங்களில் 60 சத வீதமானவற்றை எச்சமயத்திலும் செயற்படக் கூடியதானவையாக மாற்றினால் அது எமது போக்குவரத்துத் தேவைக்கு போதுமானதாக இருக்கும்.

### விமானப்படை வானில் ஆதிக்கம்

எப்படியாயினும் —விநியோகத்திற்காக வானில் நாம் ஆதிக்கம் செலுத்த வேண்டியதில்லை; தரையில் தான் ஆதிக்கம் செலுத்த வேண்டும். விமானப்படை எப்போதுமே வானில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு வான் வழியாக துருப்புகளையும் பொருள்களையும் கொண்டு சென்று இறக்க விமானப்படையால் முடியும்.

ஆனால் தரையில்தான் நாம் யுத்தத்தில் வெற்றியீட்டவேண்டும்; வானில் அல்ல.

உதாரணத்துக்கு வடக்கில், தரைவழியாக சென்று அடையமுடியாததும் அதே நேரத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதுமான பகுதிகளை எடுத்துக்கொள்ளுங்கள். இப்பகுதிகளுக்கு சகல விநியோகங்களும் கடல் மற்றும் வான் வழிகளாலுமே வழங்கப்பட்டு வருகின்றன.

இதனைச் செய்யக்கூடிய திறமை எம்மிடம் உண்டு. இதனைப் பல ஆண்டுகளாக செய்து வருகின்றோம்.

### தரை வழிகள் திறக்கப்படவேண்டும்

ஆனால் இது எமது யுத்தத்தில் வெற்றியைத் தரவில்லை. கூடுதலான விநியோகங்களை அனுப்ப தரை வழிகள் திறக்கப்படவேண்டும்.

விமானப்படையினரைக் கோருவதற்கு முன்னர், கடற்படையும் இராணுவமும் தங்களுக்குத் தேவையான விநியோகங்களை தாங்களே எடுத்துச்செல்ல முயற்சிக்கவேண்டும். இராணுவமும் கடற்படையும் அப்படிச் செய்ய முடியாதவிடத்து விமானப் படை உதவிக்குச் செல்லும்.

ஆனால் தரைவழியாகக் கொண்டு செல்லக்கூடிய சாத்தியங்கள் இருக்கும்பட்சத்தில் அவை முதலில் பயன்படுத்தப்படவேண்டும்.

கேள்வி: யுத்த நடவடிக்கைகளுக்கு விமானப்படை தயாராக இருக்கிறதா?

தளபதி: தேவையான வளங்கள் எம்மிடம் உள்ளன. தரைத் தாக்குதலுக்கு புக்காராவும் சியாமாசெட்டிகளும் உள்ளன. ஹெலிக்கொப்டர்களும் உள்ளன. தேவைப்படும் பட்சத்தில் மிகக் குறுகிய நேரத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஏற்ற விதத்தில் ஏனைய விமானங்களை எம்மால் மாற்றவும் முடியும்.

கேள்வி: இராணுவ நடவடிக்கையில் தற்போது விமானப்படை கடைப்பிடித்து வரும் தந்திரோபாயங்கள் இன்றைய யுத்தத்துக்குச் சரியானவை என்று கருதுகிறீர்களா?

தளபதி: ஆம். எமது தந்திரோபாயங்கள் குறித்து நான் திருப்தியடைகின்றேன். இன்னும் அவற்றை முன்னேற்ற இடமுண்டு.

கேள்வி: விமானப்படையின் குண்டுவீச்சினால் யாழ்ப்பாணத்தில் பல் குடிமக்கள் கொல்லப்பட்டுள்ளனரே. விமானக்குண்டு வீச்சுக் குறித்த கொள்கையில் மாற்றம் வேண்டும் என்று எண்ணுகிறீர்களா?

தளபதி: யாழ்ப்பாணத்து மக்கள் எமது சொந்த மக்களே. அவர்களும் ஸ்ரீலங்காவினரே. அவர்களை துன்புறுத்த நாம் விரும்பவில்லை. எமது நடவடிக்கைகளினால் அவர்கள் பாதிக்கப்படாதிருக்க நாம் எம்மாலான முயற்சிகளைச் செய்து வருகின்றோம். துரதிஷ்டவசமாக தவறுகள் இடம்பெறுகின்றன.

### தேவாலய மீது தாக்கு! நாம் செய்த தவறே

முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட இலக்குகள் மீது நாம் விமானக் குண்டுத் தாக்குதல்களை நடாத்துகின்றோம். இராணுவப் புலனாய்வு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இது இடம்பெறுகின்றது. ஆனால் இராணுவப் புலனாய்வும் பிழையாக முடியும். நாமும் தவறிழைக்க முடியும்.

யாழ். சென் ஜேம்ஸ் தேவாலயம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் நாம் தவறு இழைத்துவிட்டோம். இப்படியான தவறுகள் இடம்பெறுகின்றன. இனியும் எதிர்காலத்தில் இடம்பெறும் தவறுகளும் யுத்தத்தின் ஒரு பகுதியே

விமானப்படை மாசற்ற யுத்தம் ஒன்றை நடத்தவே முயற்சித்து வருகின்றது. எப்படியாயினும் குடிமக்களுக்கு ஏற்படும் சேதங்களை மிகக் குறைந்த அளவில் வைத்திருக்கவே நாம் முயற்சிக்கின்றோம்.

கேள்வி: நீண்ட காலமாக இழுபட்டு வரும் இந்த யுத்தத்தில் முப்படைகளும் வெற்றியீட்ட முடியும் என்று அச்சொட்டாக எண்ணுகிறீர்களா?

தளபதி: ஆயுதப் படைகளின் பணி, சமாதான நடைமுறையைத் துரிதப்படுத்துவதே. களத்தில், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிரியை நாம் தோற்கடிக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் யுத்தத்தை விட்டு சமாதானத்துக்கு வருவார்கள்.

இராணுவ ரீதியில் எதிரியைப் பலவீனப்படுத்துவதன் மூலமே அமைதிக்கான நடைமுறையை நாம் துரிதப்படுத்த முடியும்.

கேள்வி: அண்மைக் காலத்தில் விமானப்படையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் உண்டா?

தளபதி: இப்போது அது தேவை இல்லை. விமானப் படையில் 11ஆயிரம் வீரர்கள் உள்ளனர். 3 ஆயிரம் சிவில் ஊழியர்கள் உள்ளனர். தேவைக்கு மேலதிகமாக ஆட்கள் விமானப்படையில் உள்ளனர். ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை புதிதாக ஆட்திரட்டி வருகின்றோம்.

### 150 பேர் தப்பி ஓடி விட்டனர்

விமானப்படையில் இருந்து 150பேர் தப்பி ஓடிவிட்டனர். எமது கட்டுப்பாட்டில் உள்ள மொரவேவா, மகாஓயா விமானப்படை பிரிவுப் பிரதேசங்களின் கட்டுப்பாட்டை இராணுவத்துக்கு கையளிக்கவுள்ளோம். (ஒ-எ)

## நெடுங்கேணியில் தாக்குதல் சிப்பாய் பலி; 6 பேர் காயம்

### ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், பெப். 23

முல்லை மாவட்டம் நெடுங்கேணிப் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். படையினரின் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

சிலோன் தியேட்டர் இராணுவ முகாமுக்கும், அரியகுண்டான் இராணுவ முகாமுக்கும் இடையில் அமைந்துள்ள காவலரண் ஒன்றின் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

- ★ ரி 81 ரக துப்பாக்கி - 01
- ★ அதற்குரிய மகஸின் - 05
- ★ ரி 56 ரக மகஸின் - 03
- ★ ஏ.கே. ஹோல்சர் - 03
- ★ நடுத்தர ரவைகள் - 184
- ★ மழைக்கவசம் - 03

மணலாறு (வெலிஓயா) பகுதியில் விடுதலைப் புலிகள் இரு முகாம்கள் மீது நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார் என்றும் மேலும் ஆறு படையினர் படுகாயம் அடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ-3-6)

## விலையேற்றத்தை கண்டித்து நகரில் பேரணி, மறியல்!

### முதலாம் திகதி நடத்த முடிவு

யாழ்ப்பாணம், பெப். 23

கப்பல் கட்டணம் அறவிடப்படுவதால் ஏற்பட்டுள்ள பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியையும், மறியல் போராட்டத்தையும் நடத்த யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

இது சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது. இதில் மாவட்டத்திலுள்ள அனைத்து வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-162)

### முல்லைக் கடலில் கொலையுண்ட

## மேலும் ஆறு மீனவரின் சடலங்கள் ஒதுங்கின!

கடந்த வெள்ளிக்கிழமை முல்லை மாவட்டம் பூனைத்தொடுவாய் — கடற்தொடுவாய் கடற்பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையின் தாக்குதலில் உயிரிழந்த மீனவர்களில் மற்றும் ஆறு பேரின் சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டிக்குளம், பூனைத்தொடுவாய் பகுதியில் இவை கரை ஒதுங்கின.

இச்சம்பவத்தில் உயிரிழந்த மூன்று மீனவர்களின் சடலங்கள் ஏற்கனவே கரை ஒதுங்கியிருந்தன என்பது தெரிந்ததே.

இச்சம்பவத்தில் காணாமற் போன மற்றொரு மீனவர் குறித்து இதுவரை தகவல் ஏதும் தெரியவரவில்லை.

இதனிடையே— பூனைத்தொடுவாய் சென். மேரீஸ் கடற்தொழிலாளர் சங்கத்தினர் உயிரிழந்த மீனவரின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வழங்கி உள்ளனர். (உ-3)

### நாகதேவன் துறையில் கைப்பற்றப்பட்ட

## 'வாட்டர் ஜெட்' படகுகளில் மன்னார் கடலில் புலிகள்!

பூநகரி நாகதேவன்துறை கடற்படைத் தளத்தில் இருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட "வாட்டர் ஜெட்" எனப்படும் அதிவேக நவீன படகுகள் மன்னார் கடலில் சுற்றி வருவது கடற்படையினரால் கண்டறியப்பட்டுள்ளதாகவும் இதனை அடுத்து கடற்படையினரும், விமானப்படையினரும் உஷார்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மன்னார் கடலில் விடுதலைப் புலிகள் நடமாடி வருவது கடற்படையினரின் "ரடார்" திரையில் அடிக்கடி தென்பட்டு வருவதாகவும் ஏதோ தாக்குதல் திட்டத்துக்காகவே இந்த நவீன படகுகளில் அவர்கள் நடமாடி வருவதாக பாதுகாப்புப் பகுதியினர் சந்தேகிக்கின்றனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகதேவன்துறை கடற்படைத் தளத்தை தாக்கிய போது அங்கிருந்து "வாட்டர் ஜெட்" வள்ளங்கள் பலவற்றை விடுதலைப்புலிகள் கைப்பற்றி இருந்தது தெரிந்ததே. (ஒ-5)

## ஆஸி. புலமைப் பரிசில் முடிவு திகதி ஏப் 1

கொழும்பு, பெப் 23

அவுஸ்திரேலியாவின் பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பை மேற்கொள்ளவும் தொழில் நுட்பக் கல்விப் பயிற்சியைப் பெறவும் அங்குள்ள அவுஸ்திரேலியாவில் கல்லூரிகளில் (டி. ஏ. எப். ஏ.) மேற்படிப்பைத் தொடரவும் விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

அவுஸ்திரேலிய டி. ஏ. எப். ஏ. கல்லூரிகளுக்கு தொழிற் பயிற்சிக்காக விண்ணப்பிப்பவர்கள் குறைந்த பட்சம் 'ஏ' மட்டம் கொண்ட 250 கூட்டுப் புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழகப் பட்டப் படிப்புக்கான விண்ணப்பதாரிகள் குறைந்த பட்சம் 'ஏ' மட்டம் கொண்ட 300 கூட்டுப் புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1995 முற்பகுதியில் ஆரம்பமாகும் பாடநெறிகளுக்காக அவுஸ்திரேலிய அபிவிருத்தி கூட்டுறவு புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில்கள் அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கு முன் கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய தூதரகத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

இந்தப் புலமைப் பரிசில் திட்டம்பற்றிய விவரங்களை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கை, 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் விளம்பர பணிமனையில் பார்வையிடலாம். (க)

காட்டின் மரம் உயர
நாட்டின் தரம் உயரும்

# மாணவர் மத்தியில் வாந்திபேதி?

# பாடசாலை ஒன்றை மூட அனுமதி

வல்வெட்டித்துறைக் கொத்தணியைச் சேர்ந்த கொற்றாவத்தை அ.மி.த.க. பாட

### இன்றைய இசைவிழாவில்

இளங்கலைஞர் மன்ற இசைவிழாவின் 12 ஆம் நாளாகிய இன்று வை. கல்யாணி, வை. யசோதை, எஸ். சிரேகா, ரி. சந்தானலட்சுமி, சக்திதேவி சிவகுமார் ஆகியோரின் பாட்டு, ரஞ்சனி ராமலிங்கம், இந்திரா பொன்னுத்துரை, சுரேந்தினி சிதம்பரநாதன் ஆகியோரின் புல்லாங்குழல் இசை, நந்தினி விஜயரத்தினத்தின் வீணை இசை, நளாயினி இராஜதுரை மாணவிகளின் பரத நாட்டியம் ஆகியன இடம் பெறும்.

இன்றைய விழாவுக்கு திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமை வகிப்பார். திரு. கே. எம். பஞ்சாபிகேசன் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வார்.

### வல்வை-கொற்றாவத்தை பகுதியில் நோய் தடுப்பு நடவடிக்கை

சாலையை தற்காலிகமாக மூடிவிடுவதற்கு கோட்டக் கல்வி அதிகாரி திரு வி. ரி. செல்வரத்தினம் அனுமதி வழங்கி உள்ளார்.

இப்பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாந்திபேதி கொலரா பரவுவதாகச் சந்தேகிக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

இப்பாடசாலையைச் சேர்ந்த சுமார் 15 மாணவர்கள் இத்தகைய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

அண்மையில் ஒரு மாணவனும் பொதுமக்களில் ஒருவரும் வாந்திபேதி நோயினால் இறந்ததாகச் சந்தேகிக்கப்பட்டது.

பாடசாலை அதிபரும் அப்பகுதி கிராம சேவக அதிகாரியும் கல்வித் திணைக்கள யாழ்ப்பாணம் வலயம் 2 கல்விப் பணிப்பாளர் திரு. ச. கந்தசாமியின் கவனத்திற்கு இந்த விடயத்தைக் கொண்டு வந்தனர்.

### பாலர் பாடசாலை விவரம்

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள வலயம் இரண்டுக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் பாலர் பாடசாலைகளின் பெயர், ஆசிரியர்கள் விவரம், சரியான முகவரி ஆகியவற்றைத் தமக்குத் தந்துதவும்படி மேற்படி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்

பாலர் பாடசாலைகளுக்கு சீரான பாடவிதானம் அமைப்பதற்கும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் வசதியாக இந்தத் தகவல்களை கோப்பாய் இரு பாலையில் உள்ள ... அனுப்பி வைக்கும்படி அவர் கேட்டுள்ளார். (க)

இது பற்றிய அவசர தகவல் பருத்தித்துறை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிக்கும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டது.

இக்கிராம மக்கள் மத்தியில் மலசலகூட பாவனை குறைவாகவுள்ளதால் இந்த நோய் வேகமாகப் பரவுகிறது. அத்துடன் அப்பகுதி மக்கள் அருகுள்ள கோயில் கிணற்றில் இருந்தும் பாடசாலையில் உள்ள குழாய் கிணற்றிலிருந்தும் கிடைக்கும் நீரையே பாவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் எப்போதும் இல்லாத அளவு இக்கிராமத்தில் வாந்திபேதி பரவி வருவதால் பாடசாலையைத் தற்காலிகமாக மூடிவிடுமாறு கல்வித் திணைக்களம் பணித்துள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### அப்புக்குட்டி செல்லர்

K. K. S. வீதி தோண்டாவில் மேற்கைச் சேர்ந்த அப்புக்குட்டி செல்லர் 18-2-94 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கமுத்துவின் அன்புக் கணவரும், பூமணி, சின்னமணி, இராசமணி, காலஞ்சென்ற கந்தசாமி, சிவபாதம் (சட்டட ஒப்பந்தக்காரர்), சற்குணம் (உரிமையாளர், கதிரமலை ஆனந்தன்), வீரசிங்கம் (கிஸ்ணா தச்சுத் தொழிலகம்), பொன்ராசா (ஜேர்மனி), மனோன்மணி, ஆனந்தராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஆறுமுகம், காலஞ்சென்ற முத்துராசா, பொன்ராசா, புஸ்பராணி, பூமணி, ராணி, திலகவதி, இராசேஸ்வரி விமலசந்திரன் (ஜேர்மனி), றோசணா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக (புதன்) 23-2-94 அன்று 10 மணியளவில் கரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

தோண்டாவில் மேற்கு. (29570)

### முதலித்தம்பி சோமசுந்தரம்

மூளாய் தெற்கைச் சேர்ந்த முதலித்தம்பி சோமசுந்தரம் (மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை ஓய்வு பெற்ற லிகிதர்) 20-02-94 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

இவர் முதலித்தம்பி பார்வதியார் அவர்களின் அன்பு மகனும், புஸ்பதேவியின் அன்புக் கணவரும், யசோதரன், சிறீதரன், சாந்தி, ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மயில்வாகனம், சதாசிவம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெரியதம்பி தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-2-94) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பெ. கனகரத்தினம்
[மைத்துனர்]
சங்கானை ப. நோ. கூ. சங்கம்

மூளாய் தெற்கு.
[29597]

### சந்தியாப்பிள்ளை செபமாலை

மன்னாரைப் பிறப்பிடமாகவும், நொத்தாரிஸ் லேனில் வசித்தவருமாகிய சந்தியாப்பிள்ளை செபமாலை 21-2-94 இல் காலமாகிவிட்டார்.

இவர் சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும், யேசுதாசன் (தபால் அதிபர் - மன்னார்), திருமதி மேரி தர்மலிங்கம், அன்ரன் உதயகுமார் (மருந்தாளர் - கிளிநொச்சி வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரமேஸ், புனேஸ், யோஜினி, மலனி, லோமிலா, கில்டா, சுஜினா, றொபினா, சனோ ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (23-2-94) புதன் காலை 9-30 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மலிங்கம்
[மருமகன்]

7, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை. (29594)

### திருமதி அற்புதலட்சுமி கந்தசாமி

(இளைப்பாறிய ஆசிரியை)

உடுவில் தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை அற்புதலட்சுமி கந்தசாமி 22-2-94 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அல்லிமலர், இராசமுத்து (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் சகோதரியும், சிவலோகநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவஸ்கந்தநாதன் ஆகியோரின் தாயாரும், வள்ளிநாயகியின் சிறிய தாயாரும், திருமதி ஜெயமணி சிவலோகநாதனின் மாமியாரும், காந்தரூபினி, சாமினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-2-94) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் திப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு இ. மனோகரந்தன் (மனோ)
(பெறாமகன்)

உடுவில் தெற்கு,
உடுவில். (7010)

### முத்துக்குமாரு மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டு களஞ்சிய காவலாளி யாழ்ப்பாணம்)

கந்தாமடத்தைப் பிறப்பிடமாகவும் நாரந்தனையை வசிப்பிடமாகவும் தற்பொழுது இருபாலையில் வசித்தவருமான மு. மயில்வாகனம் 22-2-94 இல் காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் மோகனாம்பிகை, சச்சிதானந்தன், பரமானந்தன், நாகேஸ்வரி, காலஞ்சென்ற முருகானந்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சிவநேசன், சௌந்தரராஜன் ஆகியோரின் மாமனாரும் சோபிஜா, திவ்ஜா, திரேஜா, திரோஜினி ஆகியோரின் அன்புப் பேரனும் கனகேஸ்வரியின் சகோதரரும் தம்பு பாலசிங்கத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-2-94) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ம. சச்சிதானந்தன்
ம. பரமானந்தன்
(மகன்மார்)

கோப்பாய் தெற்கு. (29596)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பொதுத் தேர்தலில் இ.தொ.கா. தனித்துப் போட்டியிட முடிவு?

கொழும்பு, பெப். 23

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும்.

இ.தொ.கா. வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்குத் தேவையான ஆதரவு தமக்கிருப்பதாக தொண்டமான் உறுதியாக நம்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை — இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் செல்லச்சாமி சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இ.தொ.கா. - ஐ.தே.க. இடையே தற்போது உள்ள உறவு நிலைவரத்தைப் பார்க்கும்போது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தொண்டமான் திரு. விஜேதுங்காவுக்கு ஆதரவை வழங்காது விடலாம் என்று தெரிவதாகவும் 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது. (உ-எ)

## நாளை முதல் தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 23

நேற்று முன்தினம் பருத்தித்துறையை வந்தடைந்த 'கோமாரி' கப்பலில் எடுத்து வரப்பட்ட 438 தபால் பொதிகளும் இன்று பருத்தித்துறையில் இருந்து யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டு நாளை வியாழக்கிழமை முதல் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-162)

## கராத்தே காட்சி

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராஜாவை கௌரவிக்குமுகமாக யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையால் நடத்தப்படும் கராத்தே கண்காட்சி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (ஓ-3)

## மன்னாரில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், பெப். 23

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் மன்னார் மாவட்டத்தில் கட்டையடம்பன் பகுதியில் புக்காரா விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதலை நடத்தின. அச்சமயம் இரு ஹெலிகள் 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டன. (உ-3)

## பாடசாலைகள் மூடப்பட்டன

கொழும்பு பெப். 23

கிழக்கிலும், வவுனியாவிலும் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களை முன்னிட்டு அப்பகுதியைச் சேர்ந்த பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 25 ஆம் திகதி முதல் மார்ச் 2 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 23

ஊர்காவற்றுறை ப. நோ, கூ. சங்கத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கான லர் உணவு நிவாரணத்தை பெறுபவர்கள் ஜனவரி மாதத்திற்கான நிவாரண பொருள்களை — எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளலாம் என்று மேற்படி சங்க பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (ஓ-162)

# மேலும் 10 ஆயிரம் படையினர் வடக்கிற்கு

## அடுத்த மாதம் அனுப்பப்படுவராம்

கொழும்பு, பெப். 23

வடக்கில் மேலும் புதிய இராணுவப்படைப் பிரிவு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

புதிதாக இராணுவத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட சுமார் 10 ஆயிரம் பேரைக் கொண்ட இப்பிரிவு, அடுத்த மாதம் முதல் வாரத்தில் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

25 ஆவது படைப்பிரிவு எனப் பெயரிடப்படவுள்ள அந்தப் புதிய பிரிவின் தளபதியாக பிரிகேடியர் சரத் பொன்சேகா நியமிக்கப்படவுள்ளார்.

இராணுவத் தலைமையக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இத்தகவல்களைத் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஓ-5)

# வடபகுதி முகாம்களில் 35 ஆயிரம் ராணுவத்தினர்!

கொழும்பு, பெப். 23

வடபகுதியிலுள்ள படை முகாம்களில் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தற்போது நிலை கொண்டுள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களை விட வடக்கில் பெரும் எண்ணிக்கையான கடற்படையினரும், விமானப்படையினரும் நிலை கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ)

# அஷ்ரப் சென்ற பொலீஸ் ஜீப் கல் வீச்சுக்கு இலக்கானது!

கொழும்பு, பெப் 23

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் பயணம் செய்த ஜீப் வண்டி கடந்த சனிக்கிழமை இரவு அக்கரைப்பற்றில் கல் வீச்சுக்கு இலக்கானது. அதில் அஷ்ரப் காயம் எதுவும் இன்றித் தப்பிக் கொண்டார்.

அக்கரைப்பற்று 5ஆம் குறிச்சி ஹிஜ்ரா பாடசாலைக்கு அருகில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிவிட்டு அவர் அக்கரைப்பற்று பொலீஸாரின் ஜீப்பில் கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது —

எழுவட்டுவான் என்ற இடத்துக்கு சமீபமாக ஜீப்பீது கற்கள் வீசப்பட்டன. இதனால் ஜீப்பின் பின் கண்ணாடிகள் நொருங்கின. ஜீப்பில் இருந்த வேறு சிலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன.

இக் கல்வீச்சு சம்பவம் தொடர்பாகப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஓ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நீலகண்டன் மாரிமுத்து

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாவும் கொண்ட அரியகுட்டி அன்னப்பாவின் மகள் நீலகண்டன் மாரிமுத்து காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 23-02-94 காலை 10 மணிக்கு ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்;
பிள்ளைகள்,

ஆனைக்கோட்டை,
மானிப்பாய். (29585)

### துரையப்பா குணநாயகம்

(இளைப்பாறிய பணிப்பாளர் - மாவட்ட மீன்பிடி இலாகா)

துரையப்பா குணநாயகம் நேற்று (22-2-94) காலமானார்.

இவர் தேவபாக்கியம் குணநாயகத்தின் (U.S.A.) அன்புக் கணவரும், [illegible] (U.S.A.) [illegible] பிரியதர்சினி மருத்துவ பீட மாணவி - UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஈஸ்வரி, ஜெகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான டாக்டர் எஸ். ரி. ஜே. அருமைநாயகம், ரி. இராசநாயகம், ரி. மங்களநாயகம் மற்றும் திருமதி பரிமளநாயகம், அற்புதராசா, பிள்ளைநாயகம் இராசரத்தினம், [illegible] அரசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23-2-94) பி.ப. 3.30 மணிக்கு 214, கச்சேரி நல்லூர் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரியோவான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி மீனா அருமைநாயகம்
(மீனா—பெறாமகள்)

214, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (29599)

### கொழும்பில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

தீவிரவாதிகளைத் தேடும் பணி என்ற பெயரில் தமிழ் மக்கள் சுற்றிவளைக்கப்பட்டு வீதி வழியே இழுத்துச் செல்லப்படுகிறார்கள்

இவ்வாறு காரணமின்றி கைது செய்யப்படுவோர் இரகசிய இடங்களில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிறார்கள்

படையினரின் இத்தகைய நடவடிக்கை சர்வதேச விதி முறைகளுக்கு முரணானது

அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான அதிகாரங்களை ஸ்ரீலங்காப் படையினர் துஷ்பிரயோகம் செய்துள்ளனர்.

கொழும்பில் வாழும் தமிழர்கள் 20 பேருக்கு ஒருவர் வீதம் — கடந்த ஜூன் மாதத்தில் இருந்து படையினரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இப்படி மாதந்தோறும் 2 ஆயிரம் தமிழர்கள் வரையில் கைதாகின்றனர்.

—இவ்வாறு மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. (உ ஓ-எ-3-6)

### லெப். கேணல்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னைக் குள்ளாகிய பின்னர் கொழும்பு திரும்பிய கொத்தலாவல தற்போது விடுமுறையில் இருந்து வருகின்றார்.

அமெரிக்க இராணுவ கல்லூரியில் இராணுவப் பயிற்சி பெறச் சென்ற இடத்தில் திருட்டுக்குற்றம்சாட்டப்பட்டு இவர் வெளியேற்றப்பட்டார் என்பது தெரிந்ததே.

அமெரிக்காவில் நடந்த சம்பவம் பற்றிய விவரமான அறிக்கை ஒன்றை லெப்டினன்ட் கேணல் கொத்தலாவல இராணுவத்தளபதியிடம் சமர்ப்பித்தார் என்றும்—

அவருக்கு எதிராக விசாரணை நடத்த விசாரணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கு எதிராக இராணுவத்தலைமைப் பீடம் முடிவு எடுத்துள்ளது என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### இலங்கைநாதன் (குட்டிமாமா)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கைநாதன் (குட்டிமாமா) [ஓய்வு பெற்ற ஹட்டன் நஷனல் வங்கி] 18-02-1994 அன்று லண்டனில் காலமாகிவிட்டார்.

இவர் (ஆச்சி) லீலாவதியின் அன்புக் கணவரும் ஊர்மிளாவின் அன்புத் தந்தையும், குகராஜாவின் மாமனாரும், சோபனா, ரஞ்சனாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-02-1994 இல் லண்டனில் நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
Dr. இ. சிவசங்கர்
(மருமகன்)

''கைலாசா வாசா''
திருநெல்வேலி வடக்கு. (29598)

### திருமதி மகேஸ்வரி கணபதிப்பிள்ளை

திருமதி மகேஸ்வரி கணபதிப்பிள்ளை 7-2-94 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற ஓவசியர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணேஸ்வரி, நாகேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, சிறீகிருஷ்ணராசா (ஆசிரியர்), கமலேஸ்வரி, விக்னேஸ்வரன் (மின்சார அத்தியட்சகர்), ஒளவை (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், இராசசுந்தரம் (முன்னாள் A O மானிப்பாய்), இராதாகிருஷ்ணன் (காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற சிவபாதசுந்தரம், லலிதா, நடராசா (சினிமாஸ் Ltd), DR. துளசி நட்ணராசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற DR சின்னத்துரை, காலஞ்சென்ற செந்தாமலர், காலஞ்சென்ற ஓவசியர் செல்லத்துரை, பூமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 9-2-94 இல் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி இராதாகிருஷ்ணன்
(மகள்)

கோபி வீதி,
எழுமுள்ளி,
மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய். (6995)

### திருமதி விஜயலட்சுமி அற்புதராசா

திருமதி விஜயலட்சுமி அற்புதராசா (ஆசிரியர், நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்) 22-02-94 செவ்வாய் முற்பகல் 11-30 மணியளவில் காலமானார்.

இவர் திரு. த. அற்புதராசாவின் (சாளி பஸ் உரிமையாளர்) அன்பு மனைவியும், தமயந்தியின் (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆண்டு 10) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செட்டிதெரு குமாரசுவாமி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், திருமதி பாஸ்கரன் பத்மினி, திருமதி வள்ளி காந்தன், றோகினி, சாந்தினி, சிவகுமார், விஜயகுமார், கிஸ்ணகுமார், சறோஜினி, வதனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தருமலிங்கம் தம்பதிகளின் மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்:
சிவயோகம்
(மாமனார்)

11/3, கச்சேரி நல்லூர் வீதி,
(சுண்டிக்குளி தபாலகத்திற்கு அருகில்)
யாழ்ப்பாணம். (29587)

### திருமதி ராசமலர் நவரட்ணம்

(மிருசுவில்)

திருமதி ராசமலர் நவரட்ணம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற றொபேட், தங்கமணி ஆகியோரின் அன்பு மகளும், அன்ரன் றெஜி, (இ.போ.ச — கிளிநொச்சி), பேசி நிக்கலஸ் (யாழ் பிறப்பு, இறப்பு பதிவு அலுவலகம்), ஜெறி (பிரான்ஸ்), றஞ்சி (கனடா) வதனி (இங்கிலாந்து), ரஜனி (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும், றொபேட் ராசசிங்கத்தின் அன்புச் சகோதரியும், புஷ்பம், மேசி (யாழ். பிறப்பு, இறப்பு பதிவு அலுவலகம்), மனோ (கனடா), ஆனந்தராசா (இங்கிலாந்து), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பேசி நிக்கலஸ்
(மகன்)

ராஜஸ்தான்
மிருசுவில். (29589)

### சிறீஸ்கந்த வாலரசன் இரவிகுலராசன்

(Engineer Water Board Sydney Australia)

யாழ்ப்பாணம் நாவலர் றோட் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவரான சிறீஸ்கந்த வாலரசன் இரவிகுலராசன் அவுஸ்திரேலியாவில் 12-02-94 அன்று காலமானார் அன்னார் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை, மொரட்டுவையில் பொறியியலாளராகக் கடமையாற்றியவர் ஆவார்.

இவர் காலம் சென்ற சிறீஸ்கந்தவாலரசன், பரிமளத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் சிவசம்பு அன்னப்பிள்ளையின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், முரளி, கௌரிஷங்கர், விஜித ஆகியோரின் அன்புத் தந்தையும், கோகுலம் (லண்டன்), ராஜகுலம் (கனடா) நவராசகுலம் (கனடா), தவராசகுலம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தருமலிங்கம் (கனடா), சண்முகநாதன் (மானிப்பாய்), பரந்தாமன் (கிளிநொச்சி), இராஜேஸ்வரி (கனடா) கனகலிங்கம் (அவுஸ்திரேலியா), இராஜலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவுஸ்திரேலியாவில் (16-02-94) புதன்கிழமை தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சி. சண்முகநாதன்
(மைத்துனர்)

''சிவஸ்தன்''
மானிப்பாய் வடக்கு
மானிப்பாய் (29595)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org